பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**08 08 2026** **SATURDAY** **12.40 PM**

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அனைத்துத்துறைகளிலும் சுயசார்பினை எட்ட வேண்டும் என்ற நோக்கில், தமது அரசு பணியாற்றி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. உயர்கல்வித்துறையை வலுப்படுத்துவதற்கான திட்டங்கள் குறித்த காலத்திற்குள் நிறைவேற்றப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. இமாச்சலப்பிரசேத்தில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் **8** பேர் உயிரிழந்தனர்.

4. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு கஷ்மீர் பகுதியில் நிலவும் பாதுகாப்பு சூழல் குறித்து ஐ நா கவலை தெரிவித்துள்ளது.

5. **20** வயதுக்குட்பட்டோருக்கான உலக தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Ashish Yadav** வெள்ளிப்பதக்கம் வென்று வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

அனைத்துத்துறைகளிலும் சுயசார்பினை எட்ட வேண்டும் என்ற நோக்கில், தமது அரசு பணியாற்றி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தில்லி ஐ ஐ டி-யின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

உலகம் விரைவாக மாறுதல்களை கண்டுவரும் இந்த சூழலில் தொழில்நுட்பத்தை கற்றுக்கொள்பவர்கள் வெற்றிபெறுவார்கள் என்று அவர் தெரிவித்தார்.

எந்தவொரு சவாலையும் வாய்ப்பாக மாற்றிக் கொள்ளும் திறனை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் பிரதமர் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>>

உயர்கல்வித்துறையை வலுப்படுத்துவதற்கான திட்டங்கள் குறித்த காலத்திற்குள் நிறைவேற்றப்படும் என்று அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

புதுதில்லியில், இதுதொடர்பாக அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

சர்வதேச தரத்திற்கு இணையாக கல்வி கட்டமைப்புகளை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் அமைச்சர் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>>

நாட்டின் எல்லைப்பகுதிகளில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களை மேற்கொள்வது தொடர்பான நெறிமுறைகளை உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

ஒரு கிலோமீட்டர் தொலைவிற்குள் புதிய திட்டங்கள் தொடங்கப்படக்கூடாது என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய அரசின் உரிய ஒப்புதல் இன்றி அண்டை நாடுகளை சேர்ந்தவர்களை இத்திட்டப்பணிகளில் ஈடுபடுத்தக்கூடாது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைகளை தனிநபர்கள் கட்டணமின்றி தொடர்ந்து மேற்கொள்ளலாம் என்று அதற்கான குழுமம் அறிவித்துள்ளது.

சிறு வர்த்தகர்களுக்கும் இது பொருந்தும் என்று அந்த குழுமத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதி தொழில்நுட்ப நிறுவனங்களும், ரிசர்வ் வங்கியும் இணைய குற்றங்களை களைவதற்கான கட்டமைப்புகளை வலுப்படுத்தி வருவதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

பிரிக்ஸ் நாடுகளின் கலாச்சார பணிக்குழு கூட்டம் போபாலில் நடைபெற்று வருகிறது.

இதில் பங்கேற்ற வெளிநாட்டு பிரதிநிதிகள் இன்று மத்தியப்பிரதேசத்தின் பாரம்பரியமிக்க சுற்றுலாத் தலங்களை பார்வையிட்டனர்.

<<<<<<>>>>>>

வெளிநாட்டு நன்கொடை சட்டத்திருத்த மசோதா தொடர்பாக அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ள கருத்துகளை நிராகரிப்பதாக இந்தியா கூறியுள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஸ்வால், சட்ட மசோதாக்களை கொண்டுவருவது உள்நாட்டு விவகாரம் என்று தெளிவுபடுத்தினார்.

இதில் தலையிடுவதற்கோ, கருத்து தெரிவிப்பதற்கோ யாருக்கும் அதிகாரம் இல்லை என்றும் அவர் திட்டவட்டமாக தெரிவித்தார்.

பாகிஸ்தான் — துருக்கி - சவுதி அரேபியா இடையே மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு ஒப்பந்தத்தை இந்தியா உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும் திரு ரன்தீர் ஜெய்ஸ்வால் கூறினார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் தொகுதி மறுவரையறை தொடர்பாக முதலமைச்சர் திரு விஜய், மாநிலத்தை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இன்று ஆலோசனை மேற்கொள்கிறார்.

சென்னை கலைவாணர் அரங்கத்தில் பிற்பகல் 3 மணியளவில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் பங்கேற்க போவதில்லை என்று திமுக அறிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

கேரளத்தில் போதைப்பொருளை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக அம்மாநில உள்துறை அமைச்சர் திரு ரமேஷ் சென்னிதாலா கூறியுள்ளார்.

பாலக்காட்டில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதற்கென நடத்தப்பட்ட சிறப்பு இயக்கத்தில், ஒன்பதாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

ஏழாயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கேரள அரசின் இந்த நடவடிக்கைகளுக்கு மக்கள் முழு ஒத்துழைப்பு அளித்து வருவதாகவும் திரு ரமேஷ் சென்னிதாலா கூறினார்.

<<<<<<>>>>>>

இமாச்சலப்பிரதேசத்தில் இன்று காலை நேரிட்ட சாலை விபத்தில் **8** பேர் உயிரிழந்தனர், **11** பேர் காயமடைந்தனர்.

**Chamba** மாவட்டத்துக்கு உட்பட்ட பகுதியில் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து நிலை தடுமாறி கவிழ்ந்து விபத்துக்குள்ளானதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<<<>>>>>>

மணிப்பூரில் சவாலான சூழ்நிலையின்போது அதிகாரிகள் சிறப்பாக பணியாற்றியதாக அம்மாநில முதலமைச்சர் திரு **Yumnam Khemchand Singh** கூறியுள்ளார்.

இம்பாலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நிலவளத்துறையின் கைபேசி செயலி சேவையை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

நில ஆவணங்கள் நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்ய இது உதவிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

நில ஆவணங்களை டிஜிட்டல் மயமாக்கும் பணிகளில் அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் பணியாற்றியதாகவும் திரு **Yumnam Khemchand Singh** கூறினார்.

<<<<<<>>>>>>

ஜார்கண்டில் தேர்வு முறைகேட்டுக்கு எதிராக மாணவர்கள் மேற்கொண்டுவரும் போராட்டம் **15-**ஆவது நாளாக இன்றும் நீடிக்கிறது.

இதற்கிடையே, போராட்டம் நடத்திவரும் ஒரு குழுவினருடன் அம்மாநில அரசு இன்றும் பேச்சு நடத்தியது.

நேற்று ஒரு குழுவினருடன் அரசு நடத்திய பேச்சுக்களில் எந்த முடிவும் எட்டடப்படவில்லை என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

வெடி மற்றும் போதைப்பொருளை கடத்தியது தொடர்பான வழக்கில், கைது செய்யப்பட்ட இரண்டு பேருக்கு எதிராக குற்றச்சாட்டுகளை தேசிய புலனாய்வு அமைப்பு பதிவு செய்துள்ளது.

மொஹாலியில் உள்ள சிறப்பு நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பஞ்சாப் மற்றும் தில்லியில் தாக்குதல் நடத்த இவர்கள் திட்டமிட்டதாகவும், குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

<<<<<<>>>>>>

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு கஷ்மீர் பகுதியில் நிலவும் பாதுகாப்பு சூழல் குறித்து ஐ நா கவலை தெரிவித்துள்ளது.

அப்பகுதியில் போராட்டம் நடத்திவருபவர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஐ நா பொதுச்செயலாளர் திரு **Antinio Guterres** கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு கஷ்மீர் பகுதியில் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>>

ஒடிஷா மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்று கனமுதல், மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

கர்நாடகா, தமிழகம் மற்றும் புதுச்சேரிக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரளத்திலும் கனமழை நீடிக்க வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

காசர்கோட், கன்னூர், வயநாடு, கோட்டயம், ஆலப்புழா மற்றும் பத்தனம்திட்டா மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, அஸ்ஸாமில் மழை வெள்ளத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 98-ஆக அதிகரித்துள்ளது.

**13** மாவட்டங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

**20** வயதுக்குட்பட்டோருக்கான உலக தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Ashish Yadav** வெள்ளிப்பதக்கம் வென்று வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

அமெரிக்காவின் **Eugene**-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஈட்டி எறிதல் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

ஆடவர் நீளம் தாண்டுதல் பிரிவில் **Shanavaz Khan** மற்றும் **Jithin Arjunan** இறுதிச்சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

மகளிர் உயரம் தாண்டுதல் பிரிவில் பூஜாவும் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

---------------

கொரிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Ashmita Chaliha** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், **21-13, 16-21, 21-13** என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Rakshita Sree**-ஐ வென்றார்.

----------

மலேசியாவுக்கு எதிரான **21** வயதுக்குட்பட்டோருக்கான முதலாவது ஹாக்கி போட்டியில் இந்தியா **3-2** என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது.

பெங்களூருவில் நடைபெற்ற இப்போட்டியில், **Anmol Ekka** ஹாட்ரிக் கோல் அடித்தார்.

ஐந்து போட்டிகளை கொண்ட இந்த தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறுகிறது.

--------------

**Lexington** சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Niki Kaliyanda Poonacha** - ஈக்வெடாரின் **Gonzalo Escober** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை, **4-6, 7-5, 10-6** என்ற செட் கணக்கில், பெலாரசின் **Ivan Liutarevich** — தைவானின் **Ray Ho** இணையை வென்றது.

---------------

பல்கேரியாவில் நடைபெற்று வரும் **19** வயதுக்குட்பட்டோருக்கான படகு சாம்பியன் போட்டியில், இந்தியாவின் **Malem Huidrom Chanu** இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

---------------

பல்கலைக்கழங்களுக்கு இடையேயான உலக ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மும்பையில் நடைபெற்று வரும் இப்போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இந்தியா செக்குடியரசை வென்றது.

---------------

இலங்கை **Eleven** அணிக்கு எதிரான மூன்று நாள் பயிற்சி கிரிக்கெட் போட்டியில் இரண்டாம் நாளான இன்று இந்தியா முதல் இன்னிங்சில் சற்றுமுன்வரை ஒரு விக்கெட் இழப்பிற்கு **67** ரன் எடுத்துள்ளது.

கொழும்பில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், இலங்கை **Eleven** அணி, முதல் இன்னிங்சில் **8** விக்கெட் இழப்பிற்கு **363** ரன் எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை முடித்துக்கொள்வதாக அறிவித்தது.

**<<<<<<END>>>>>>**